## மாகாணக்கல்வித் திணைக்களம்
## வடக்குமாகாணம்
### ஆறாம் தவணைப் பரீட்சை - 2024

| தரம் - 13 (2024) | இந்துநாகரிகம் | 46 | I | இரண்டு மணித்தியாலம் |
| --- | --- | --- | --- | --- |

அறிவுறுத்தல்கள்:
- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- ❖ 1 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்று (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன் மூலம் காட்டுக.

### பகுதி - I

01) சிந்துவெளிப் பிரதேசத்தில் காணப்பட்ட முத்திரைகளில் சிவவழிபாட்டுடன் இனங்காணப்படுவது,
(1) யோகியின் வடிவத்தின் கீழ் மிருகங்களுடன் கூடிய முத்திரை
(2) முக்காலியின் மேல் பாற்கிண்ணம் மற்றும் பாம்பு படமெடுத்தல்.
(3) கருவுயிர்க்கும் நிலையிலுள்ள முத்தரை
(4) பூசைத் தட்டுக்கள் மற்றும் இசைவாத்தியத்துடன் கூடிய முத்திரை
(5) பலியிடல் முத்தரை

02) யசுர் வேதத்தில் பல நாமங்களை கூறி வழிபடும் முறையை விளக்கும் சதருத்திரியம் என்ற பகுதியுடன் தொடர்புடைய தெய்வம்,
(1) சூரியன் (2) உருத்திரன் (3) உஷை (4) இந்திரன் (5) அக்கினி

03) 'பண்பாடு' என்ற பதத்திற்குப் பழந்தமிழ் இலக்கியங்களில் குறிக்கப்படும் சொல்,
(1) தத்துவம் (2) தர்மம் (3) மரபு (4) சால்பு (5) கலை

04) பிரம வேதம் என அழைக்கப்படுவது,
(1) இருக்கு (2) யசுர் (3) அதர்வணம் (4) சாமம் (5) சங்கிதை

05) வேதங்கள் கூறும் அக்கினி வழிபாடும் சாதாரண மக்களுக்கு ஏற்புடைய உருவ வழிபாடும் இணைவுறுவது,
(1) வேதம் (2) புராணம் (3) தர்மசாஸ்திரங்கள் (4) இதிகாசங்கள் (5) சிவாகமங்கள்

06) இலங்கையின் திருக்கோயில் வரலாற்றில் வானவன் மாதேவிஈசச்ரம் என்ற கோயில் தோற்றம் பெற்ற காலம்,
(1) அனுராதபுரக்காலம் (2) பொலநறுவைக்காலம் (3) ஆரியச்சக்கரவர்த்திகள் காலம்
(4) ஒல்லாந்தர் காலம் (5) ஆங்கிலேயர் காலம்

07) "பற்றுக்களுடன் வாழும் ஒருவன் அப்பற்றுக்களை அறுக்க அப்பற்றுக்களுடனேயே பிறக்கிறான்" என குறிப்பிடுக.
(1) முண்டக உபநிடதம் (2) சாந்தோக்கிய உபநிடதம் (3) பகவத்கீதை
(4) ஸ்திரிகர்மானி (5) கடஉபநிடதம்

08) இதிகாசங்களுள் ஒன்றின் ஆசிரியர்களில் ஆதிகவி எனப் போற்றப்படுபவர்,
(1) வசிட்டர் (2) வியாசர் (3) வான்மீகி (4) காளிதாசர் (5) பாதராயணர்

09) மகாபுராணங்களுக்குரிய லட்சணங்களை உள்ளடக்கிய தொகுதி,
(1) சர்க்கம், பிரதிசர்க்கம், யோகபாதம், மனுவந்தரம், பிரதிஷ்டை
(2) சர்க்கம், பிரதிசர்க்கம், வம்சம், வம்சானுசரிதம், மனுவந்தரம்
(3) வம்சம், வம்சானுசரிதம், ஞானகாண்டம், யோகபாதம், சர்க்கம்
(4) மனுவந்தரம், வம்சானுசரிதம், ஆசாரம், வம்சம், சர்க்கம்
(5) பிரதிசர்க்கம், கிரியாபாதம், மனுவந்தரம், வம்சம், சர்க்கம்

10) ஆரிய - திராவிட இணைப்பை காட்டும் வழிபாடு,
(1) விஷ்ணு வழிபாடு (2) சிவ வழிபாடு (3) திருமால் வழிபாடு
(4) கணபதி வழிபாடு (5) முருக வழிபாடு

11) மகேந்திர வர்மனின் ஆழ்ந்த சிவபக்தியை புலப்படுத்தும் கல்வெட்டு,
(1) குடுமியாமாலை கல்வெட்டு (2) திருச்சிராப்பள்ளி கல்வெட்டு
(3) மெதிரிகிரிய கல்வெட்டு (4) மாமல்லபுர கணேசர் கல்வெட்டு
(5) உத்தர மேரூர் சாசனம்.

12) “இறைவன் ஒருவரே உண்மை; எல்லோரும் வாருங்கள்” என்ற சமய ஒருமைப்பாட்டை எடுத்துக் கூறிய நவீன கால இந்துமத சீர்திருத்தவாதி,
(1) ராஜாராம் மோகன்ராய் (2) தயானந்த சரஸ்வதி (3) சுவாமி விவேகானந்தர்
(4) ஸ்ரீ இராமகிருஷ்ணர் (5) அன்னி பெசன்ற் அம்மையார்

13) அனல்வாதம், புனல்வாதம் என்பவற்றில் ஈடுபட்டு சைவ சமயமே மெய்ச்சமயம் என நிரூபித்தவர்,
(1) அப்பர் (2) சுந்தரர் (3) சேந்தனார்
(4) திருஞானசம்பந்தர் (5) மங்கையற்கரசியார்

14) மகாபாரத்திற்கு கிருஷ்ணசந்தம் எனும் உரையை எழுதியவர்,
(1) அப்பையதீட்சிதர் (2) சனாவதிம்மர் (3) சங்கரர்
(4) கிருஷ்ணதேவராயர் (5) இராமராயர்

15) “இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்” எனக் கூறிய ஈழத்துச் சைவசமய நல்லறிஞர்,
(1) காசிவாசி செந்திநாதையார் (2) அருணாசல தேசிகர் (3) நல்லைநகர் நாவலர்
(4) சுவாமி விபுலானந்தர் (5) சுவாமி ஞானப்பிரகாசர்

16) தென்கிழக்காசியாவில் தைப்பூசத் தினம் சிறப்பாகக் கொண்டாடப்படும் ஆலயம்,
(1) கோர்ட்டுமலை கந்தசாமி ஆலயம் (2) திருக்கேதீஸ்வரம்
(3) பிரம்பனார் ஆலயம் (4) ஸ்ரீசுந்தரேஸ்வரர் ஆலயம்
(5) பத்துமலை முருகன் ஆலயம்.

17) சிவாகமங்கள் கூறும் கிரியைகளை வழிப்படுத்துபவை,
(1) பிராமணங்கள் (2) வேதாகமங்கள் (3) பத்ததிகள்
(4) புராணங்கள் (5) திருமுறைகள்

18) “கலை உருவாக்கம் என்பது தூய உளச் செயற்பாடு” எனக் கூறியவர்,
(1) சுவாமி விபுலானந்தர் (2) இரவீந்திரநாத்தாகூர் (3) அரிஸ்ரோட்டல்
(4) திருநாவுக்கரசர் (5) கலாயோகி ஆனந்த குமாரசாமி

19) இலங்கை மன்னர்கள் வைதீக சடங்குகளால் தம்மைத் தூய்மைப்படுத்தினர் என குறிப்பிட்டவர்,
(1) தொலமி (2) பாகியன் (3) அரிஸ்ரோட்டல்
(4) சேர்.ஜோன் மார்ஷல் (5) சுவாமி விபுலானந்தர்

20) "மானாபரணனின் அரண்மனையில் வேதங்களில் வல்ல புரோகிதர்கள் ஓமம் வளர்த்து யாகம் செய்தார்கள்" எனக் கூறும் நூல்,
(1) சூளவம்சம் (2) பகவத்கீதை (3) கிருஷ்ணசந்தம்
(4) மகாவம்சம் (5) பூஜாவலிய

21) சிற்பக்கலைக்களஞ்சியம் என போற்றப்படும் தலம்,
(1) தருமராஜரதம் (2) மாமல்லபுர கடற்கரைக்கோயில் (3) சகாதேவரதம்
(4) காஞ்சி கைலாசநாதர் கோயில் (5) ஐராவதேஸ்வரம்

22) நடராஜவடிவ தத்துவத்தில் அங்க இலட்சணங்களுள் ஒன்றான பாம்பு உணர்த்தி நிற்பது,
(1) ஆன்மா (2) ஞானம் (3) கோபத்தை கட்டுப்படுத்துபவன்
(4) பேரழகு (5) ஆணவம்

23) தக்கை, தண்ணுமை முதலிய இசைக்கருவிகள் ஆலய ஆராதனைகளில் பயன்படுத்தப்பட்ட காலம்,
(1) சங்ககாலம் (2) சோழர்காலம் (3) பல்லவர் காலம்
(4) ஆரியச்சக்கரவர்த்திகள் காலம் (5) நாயக்கர் காலம்

24) பிரஸ்தான திரயங்கள் என கருதப்படுபவை
(1) உபநிடதம், பிரமசூத்திரம், பகவத்கீதை
(2) உபநிடதம், ஆகமம், பகவத்கீதை
(3) இருக்கு, யசூர், சாமம்
(4) பிரமசூத்திரம், மாண்டுக்கியகாரிகை, உபநிடதம்
(5) உபநிடதம், தேவாரம், பிரமசூத்திரம்

25) தமிழாகமம் என சிறப்பிக்கப்படும் நூல்
(1) தேவாரம் (2) பெரியபுராணம் (3) திருமந்திரம்
(4) திருவாசகம் (5) மகாபாரதம்

26) இந்து மெய்யியலில் உள்ள அத்வைதக் கோட்பாட்டில் வலியுறுத்தப்படும் ஒருமை வாதத்தின் ஆரம்பத்தை இருக்கு வேதத்தின் எப்பாடலில் காணலாம்.
(1) யமசூக்தப்பாடல் (2) நாசதீயசூக்தப்பாடல் (3) வருணசூக்தப்பாடல்
(4) பிரம்ச்சரிசூக்தம் (5) ரிக்வேதம்

27) ஆகமங்கள் கூறும் முத்தி
(1) சீவன்முத்தி (2) விதேகமுத்தி (3) பரமுத்தி
(4) சுத்தாத்துவிதமுத்தி (5) பதமுத்தி

28) "சிலந்தியானது தன்னிடமிருந்து நூலை உண்டாக்கி அதைப்பற்றி நிற்கிறது. அது போலயே பிரமம் தன்னிடமிருந்து உலகைப் படைத்துள்ளது." எனும் கருத்தை வலியுறுத்துவது,
(1) முண்டக உபநிடதம் (2) பிருகதாரணிய உபநிடதம் (3) சுவேதாஸ்வர உபநிடதம்
(4) கட உபநிடதம் (5) ஐதரேய உபநிடதம்

29) உபநிடதங்களுக்கு ஒப்பாக தோன்றிய ஒரு இலக்கிய வடிவம்
(1) வேதம் (2) ஆகமம் (3) பகவத்கீதை
(4) இராமாயணம் (5) தர்மசாஸ்திரங்கள்

30) அத்வைதக் கோட்பாட்டின் திறவுகோலாக அமைவது
(1) பிரம்மசூத்திரம் (2) மகாபாஷ்யம் (3) பகவத்கீதை
(4) மாண்டுக்கியகாரிகை (5) உபநிடதம்

31) ஸ்ரீரங்கத்து தடாதிபதியான விளங்கியவர்
(1) ஆனவந்தார் (2) இராமானுஜர் (3) சங்கரர்
(4) இராமகிருஷ்ணர் (5) விவேகானந்தர்

32) "சர்வமூலம்" என்ற நூலின் ஆசிரியர்
(1) மீராபாய் (2) இராமானந்தர் (3) மத்துவர்
(4) அருணாசலதேசிகர் (5) மறைஞானசம்பந்தர்

33) "ஒரு பொருள் இன்னொன்றாக மாறாமலிருந்தபடியே மாறிவிட்டதாக தோன்றுவது"
(1) பரிணாமவாதம் (2) விவர்த்தவாதம் (3) ஆவச்சேதவாதம்
(4) சற்காரிவாதம் (5) பிரதிவிம்பவாதம்

34) இறையாழ்வார் எனும் இயற்கைபெயரை கொண்டவர்
(1) சங்கரர் (2) யாதவப்பிரகாசர் (3) திருக்கோட்டியூர் நம்பி
(4) பாதராயணர் (5) இராமானுஜர்

35) உலக ஒழுங்கை பேணுபவராக மனிதர்களின் ஒழுக்கத்தை கண்காணிப்பவனாகவும் விளங்குபவர்
(1) வர்ணன் (2) இந்திரன் (3) விஷ்ணு (4) சிவன் (5) அக்கினி

36) "அமரவோரங்க மாதும் வேதமோர் நான்கு மோதி" எனும் பாடலைப் பாடியவர்?
(1) மதுரகவியாழ்வார் (2) தொண்டரடிப் பொடியாழ்வார் (3) நம்மாழ்வார்
(4) திருப்பாணாழ்வார் (5) குலசேகர ஆழ்வார்

37) ஆலயம் ஒன்றில் அமைய வேண்டிய பிரகாரங்கள் பற்றி குறிப்பிடும் ஆகமம்
(1) காமிக ஆகமம் (2) காரண ஆகமம் (3) கிரணாகமம்
(4) பௌஷ்கர ஆகமம் (5) ரௌரவ ஆகமம்

38) துர்க்கை மகிடாசுரனை அழித்தமை உணர்த்துவது
(1) சிவபரத்துவம் (2) பக்திமரபுகள் (3) விஷ்ணுபரத்துவம்
(4) சக்தி பரத்துவம் (5) முருகபரத்துவம்

39) "மனச்சாட்சியை விட உயர் தர்மம் எதுவும் இல்லை" என குறிப்பிடுவது?
(1) புறநானூறு (2) கலித்தொகை (3) அகநானூறு
(4) பதிற்றுப்பத்து (5) திருமுருகாற்றுப்படை

40) புராணம் எனும் சொல் உணர்த்தி நிற்கும் சரியான பொருள்
(1) காதால் கேட்கப்படுவது (2) தலைமுறை தலைமுறையாக கையளிக்கப்பட்டது.
(3) பழமை வாய்ந்தது. (4) தொற்று தொட்டு வருவது
(5) இது இப்படி முன்பு நடந்தது

❖ 41 தொடக்கம் 45 வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவற்றுக்குப் பொருத்தமானவற்றை பின்வரும் அட்டவணையில் I, II, III, IV ஆகிய நிரல்களிலிருந்து தெரிவு செய்க

| I | II | III | IV |
|---|---|---|---|
| **A**<br>மாயோன் | **F**<br>ரிதம் | **K**<br>நடுகல் | **P**<br>பஞ்சாட்சர மந்திரத்தை போற்றுதல் |
| **B**<br>கோயில்களில் இதிகாச காட்சிச் சிற்பங்கள் | **G**<br>45 செய்யுட்பா | **L**<br>தர்மம் சர | **Q**<br>வடமொழியில் சிறப்புப் பெற்றது. |
| **C**<br>சைவசமய மீட்டுரவாக்கம் | **H**<br>சேயோன் | **M**<br>பதிகம் பாடல் | **R**<br>வெறியாட்டு |
| **D**<br>திருவியலூர்உய்ய வந்த தேவர் | **I**<br>ஜெயவர்மன் | **N**<br>உற்தீபற | **S**<br>யுகதர்மம் |
| **E**<br>ஆத்திசூடி | **J**<br>இறைவனை அன்பு வழியில் வழிபடல் | **O**<br>தேவராஜ வழிபாடு | **T**<br>திருவுந்தியார் |

41) சங்ககால சமய நம்பிக்கையோடு தொடர்புடைய தொகுதி
(1) B, H, N, T (2) A, H, K, R (3) D, F, M, T (4) E, J, O, S (5) A, H, N, R

42) தமிழகத்தில் சைவபக்தி இயக்கத்தினருடன் தொடர்புடை தொகுதி
(1) B, G, L, T (2) C, H, M, R (3) C, J, M, P (4) E, H, N, S (5) A, F, K, Q

43) சித்தாந்த கருத்துக்களை கோவைபடக் கூறாது தம் உணர்ச்சியனுபவங்களுக்கு ஏற்றவாறு பாடியவருடன் தொடர்புடை தொகுதி
(1) B, G, M, S (2) D, G, N, S (3) E, I, L, R (4) D, G, N, T (5) C, J, O, P

44) கம்போடியாவில் பரவிய இந்துப்பண்பாடோடு தொடர்புடைய தொகுதி
(1) B, I, O, R (2) C, H, O, Q (3) A, J, O , P (4) D, H, O, Q (5) B, I, O, Q

45) இந்து அறவியலுடன் தொடர்புடை தொகுதி
(1) E, F, L, S (2) B, I, N, S (3) E, F, N, T (4) D, J, L, S (5) C, J, L, R

❖ **46 தொடக்கம் 50 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவு செய்க.**

46) கன்மம் எனும் வினையுடன் தொடர்பற்ற விடயம்
(1) கன்மம் செயல் எனவும் பொருள்படும்.
(2) கன்மத்தின் செயல்களில் பரநிந்தையும் ஒன்றாகும்.
(3) புதிய வினை ஆகாமியமாக அமையும்
(4) தெய்வம் காரணமாகவரும் கன்மம் ஆதி தெய்வீகமாகும்.
(5) ஆணவத்தை அடக்கி ஆன்மாவை ஈடேற்றும் செயல்கள் தீவினை எனப்படும்.

47) அனந்த சயன வடிவம்
(1) அஷ்ட நாகங்களுடன் தொடர்புடையது
(2) சடாமுடியில் கங்கையை கொண்டிருக்கும்
(3) யோகநிலைக் கோலமாகும்.
(4) வலதுகால் நீண்டுகிடக்க, இடதுகால் சிறிது மடக்கி வளைந்திருக்கும்.
(5) பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் காணப்படுகின்றது.

48) சிவஞான சித்தியார்

(1) சிவஞான போதத்தின் வழிநூல்

(2) அருணந்தி சிவாச்சாரியால் இயற்றப்பட்டது.

(3) 4 ஆம் சூத்திரமாக பதி இலக்கணம் காணப்படுகிறது.

(4) சுபக்கம், பரபக்கம் எனும் இரு பிரிவுகள் உள்ளன.

(5) 12 சூத்திரங்களை உடையது.

49) அரச தர்மம்

(1) தர்மசாத்திரங்கள் விவரிக்கின்ற அரசியல் குடியாட்சி ஆகும்.

(2) தர்மசாஸ்திரங்களில் முக்கியத்துமடையதாக மனுஸ் மருதி கருதப்பட்டது.

(3) தர்மத்தைக் கடைப்பிடிப்பது “இராசதர்மம்” என்ற சிந்தனை இந்து அரசர்களிடையே காணப்பட்டது.

(4) “அரசியல் பிழைத்தோர்க்கு அறங் கூற்றாகும்” என சிலப்பதிகாரம் கூறுகிறது.

(5) ‘மன்னன் தனது தவ வலிமையால் அரசபதவியைப் பெறுகின்றான்.’ என நாரதஸ்மிருதி கூறுகிறது.

50) கிருஹஸ்த நிலை

(1) வாழ்கையின் இரண்டாவது படிநிலையாகும்.

(2) திருமணம் செய்து இல்லற வாழ்கையைத் தன் மனையாளுடன் மேற்கொள்ளும் நிலை.

(3) இல்வாழவாள் அறத்தின் வழிநின்று பொருள் ஈட்ட வேண்டும்.

(4) பூதயக்ஞத்துக்கு தைப் பொங்கள் உதாரணமாக அமைகிறது.

(5) இல்லறம் நல்லறமாக நடக்கின்ற போது சால ஜீவராசிகளையும் நேசிக்கம் பண்பு வளர்க்கப்படுகின்றது.

($50 \times 1 = 50$புள்ளிகள்)

# மாகாணக்கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2024

| | | | | |
|---|---|---|---|---|
| தரம் - 13 | இந்துநாகரிகம் | 46 | II | மூன்று மணித்தியாலம் |

மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்.

### பகுதி II

❖ **பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

### பகுதி I

1) இந்துப் பண்பாட்டை வளம்படுத்துவதில் மகாபுராணங்கள் பெறும் முக்கியத்துவத்தை மேல்வரும் விடயங்களில் விளக்குக.

(அ) புராணங்களின் அமைப்பும், வகையும். (ஆ) வழிபாட்டு முறை

(இ) பொருள்மரபு (ஈ) முக்கியத்துவம் (5+5+5+5=20 புள்ளிகள்)

2) "தென்னக வரலாற்றில் சோழர் காலம் பொற்காலமாகும்" இக் கூற்றினை அடிப்படையாக கொண்டு மேல்வரும் அம்சங்களை ஆராய்க.

(அ) சோழ மன்னர்களின் பங்கும் பணியும் (ஆ) சைவ வைணவ இலக்கியங்கள்

(இ) திருக்கோயில்களின் வளர்ச்சி (ஈ) தஞ்சைப் பெருங்கோயிலின் சிறப்பு

(5+5+5+5=20 புள்ளிகள்)

3) இலங்கையில் இந்து சமய பண்பாட்டு வளர்ச்சியில் சுவாமி விபுலானந்தர் ஆற்றிய பங்களிப்பினை மேல்வரும் தலைப்புக்களில் விபரிக்குக.

(அ) வாழ்வியல் அறிமுகம் (ஆ) சமயப்பணி

(இ) கல்விப் பணி (ஈ) கலைப்பணி

(5+5+5+5=20 புள்ளிகள்)

### பகுதி II

4) வேதாந்த தத்துவ வளர்ச்சியில் சங்கரரது அத்வைதக்கோட்பாட்டின் சிறப்புக்களை மேல்வரும் தலைப்புக்களில் விளக்குக.

(அ) பிரமமும் ஆன்மாவும் (ஆ) உலகமும் முத்தியும்

(10+10=20 புள்ளிகள்)

5) இந்து தத்துவ வளர்ச்சியில் சைவசித்தாந்தம் தனிச்சிறப்பு வாய்ந்தாகும்.

(அ) பதியின் இருப்பு (ஆ) ஆன்மாவும் மும்மலங்களும்

(10+10=20 புள்ளிகள்)

6) இந்து அறிவியல் மரபில் மருத்துவக்கலையின் சிறப்புக்களை விளக்குக.

(20 புள்ளிகள்)

7) இந்து விக்கிரக்கலையின் சிறப்பினை எடுத்துக்கூறி நடராஜா மூர்த்தத்தின் சிறப்பினை விளக்குக.

(20 புள்ளிகள்

8) இந்துக்களின் வாழ்வியலில் மகாபாரதம் பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக.

(20 புள்ளிகள்)